Registered as a News Paper in Sri Lanka　பக்கங்கள் 04　விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02　திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 22　( 05 - 05 - 1991 )　ஞாயிற்றுக்கிழமை　ஓசை: 76

## க. பொ. த. உ. பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் க. பொ. த. உயர்தரப்பரீட்சை நாளையில் இருந்து (06-05-91) பத்துத்தினங்களுக்கு இடை நிறுத்தப்படுவதாக சிறிலங்கா பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர்தர் வேசமுல்ல தெரிவித்துள்ளார் அதேவேளை வவுனியாவில அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் காரணமாக பரீட்சை மறு (4 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை கப்பல் மீது கரும் புலிகள் தாக்குதல்

## கப்பலுக்கு பலத்த சேதம்; இரு கரும்புலிகள் வீரமரணம்

(நமது நிருபர்)

சிறிலங்கா கப்பற் படைக்குச் சொந்தமான பாரிய கப்பல் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கரும்புலிப் பிரிவினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் கப்பல் பலத்தசேதமடைந்தது. பல கடற்படையினர் கொல்லப்பட்டனர்! பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலை மேற்கொண்ட இரு கரும்புலிகள் வீரமரணமடைந்தனர்.



கரும்புலி

கப்டன் ஜெயந்தன்

நேற்றுஅதிகாலை 1.55மணியளவில் பருத்தித்துறை கடலில் தரித்து நின்ற சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பாரிய கப்பல் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் கரும்புலிப் பிரிவினர் திடீர் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிகின்றது. இத்தாக்குதலில் இரு கரும்புலிகள் ஈடுபட்டனர். இவர்கள் வெடிமருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்று சிறிலங்கா கடற்படைக் கப்பலுடன் மோதியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கரும்புலிகளின இத்தாக்குதலினால் சிறிலங்கா கடற்படையின் கப்பலுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பல கடற்படையினர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதாகவும் தெரியவருகின்றது.



கரும்புலி

கப்டன் சிதம்பரம்

## இரு கரும்புலிகளுக்கு வீரவணக்கம்

(நமது நிருபர்)

சிறிலங்கா கடற்படைக் கப்பலின்மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலின்போது இரு கரும்புலிகள் வீரமரணமடைந்தனர்.

கரும்புலி கப்டன் ஜெயந்தன் (சங்குகுட்டி பத்மநாதன், மாரியம்மன்கோயிலடி சோதிபுரம், மட்டக்களப்பு), கரும்புலி கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன், நடராசா வீதி, வல்வெட்டித்துறை) ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்.

## பிரான்ஸ் குழு மீது தாக்குதல்

(கொழும்பு)

மருத்துவப் பணிகளில் ஈடுபடும் எம்.எஸ்.எவ் எனப்படும் பிரான்ஸ் நிறுவனமொன்றின் பிரதிநிதிகள் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்று சிறிலங்கா விமானப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கித் தாக்குதலினாலும், விமானக்குண்டு வீச்சின்சிதறல்களாலும்நான்கு நிவாரண மருத்துவப் பணியாட்கள் காயமடைந்துள்ளனர். விமானப்படை தாக்குதல் நடத்திய சமயம் அப்பகுதியிலிருந்து வேறு துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் இடம்பெறவில்லை யென்றும், வேறு எந்த வாகனங்களும் தமது வாகனத்திற்கு சமீபமாகச் செல்லவில்லையென்றும் தமது வாகனத்தில் பெரிய அள (4ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைக்கருகில் கடும்மோதல்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினர் வவுனியா மாவட்டத்தில் உள்ள மாமடு இராணுவ முகாமிலிருந்து இரு பிரிவுகளாக வெளியேறிய சமயம் விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டுள்ளனா.

கடந்த வியாழக்கிழமை மாலை இரண்டு மணியளவில் மாமடு இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் வெளியேறி மாணிககவளவு என்ற பகுதியை வந்தடைந்தனர். மறுநாள் அங்கிருந்து இரு பிரிவுகளாகப் பிரிந்து பேயாடி கூழாங்குளத்திற்கும், ஓமந்தைக்கும் முன்னேறிச் செல்லும்போது இரு பிரிவினர் மீதும் விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இந்தச் சண்டை ஐம்பது நிமிட நேரம் வரை நீடித்தது

இச்சண்டையின் பின் சிறி (4ஆம் பக்கம் பார்க்க)

## நேபாம் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவமுகாமில இருந்து நேற்று முன்தினம் இரவு 11.30மணியளவில்இயக்கச்சிப் பக்கமாக பதினான்கு தடவைகள் நேபாம் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது சேத விபரம் கிடைக்கவில்லை.

## இளைஞர் காயம்

(நல்லூர்)

கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின (4ஆம் பக்கம் பார்க்க)

## பொன்விழா காணும் தமிழோசைக்கு வாழ்த்து

(லண்டன்)

இந்த ஓசை ஈழத்தமிழர் இன்னல்களை இந்த உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இன்றைய இன்னல்களின் மத்தியிலும் தினம் தினம் எமது மக்கள் தமிழோசைக்கு செவி கொடுக்க தவறுவதில்லை. இந்த ஓசை இன்னும் வளர வேண்டும் என்று வாழத்துகிறேன. இவ்வாறு லண்டன் பி. பி சியின் தமிழோசை நிகழ்ச்சியின் பொன்விழா நடைபெறுவதையொட்டி தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான சதாசிவம் கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

## சுவிஸ் வங்கியில் இரகசிய கணக்கு ஒழிப்பு

(சூரிச்)

உலகெங்கிலும் உள்ள சர்வாதிகாரிகளும், போதைவஸ்துக்கடத்தலகாரர்களும், உளவாளிகளும், நீண்ட நாட்களாக உபயோகித்துவந்த பெயரில்லாத வங்கிக் கணக்கு முறையை ஒழித்துவிடும் நடவடிக்கைகளை சுவிஸ் பெடரல் வங்கிக்கமிஷன் மேற்கொண்டுளளது வரும்ஜூலை முதல் தேதியிலிருந்து பிராமிடிட்ப சிட்டுகள் என அழைக்கப்படும் அநாமதேய கணக்கு வைக்கும் முறை அழிக்கப்பட்டுவிடும் என்று நேற்று முன்தினம் சூரிச்சில் முறைப்படுத்தல் கமிஷன் அறிக்கையொன்று அறிவித்துள்ளது.

## இரண்டாம் தவணை 10ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை பிற்போடப்பட்டமையால் இரண்டாம் தவணைக்காக சகல பாடசாலைகளும் இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

பரீட்சை மீண்டும் ஆரம்பமானதும் பரீட்சை நிலையம் உள்ள பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் தொடர்ந்து நடைபெறும்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் கல்விக்கோட்டத்தின் அண்மையில் உள்ள பாட (4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நடாத்தியதற்கு ஆசிரியர் 'சங்கம் கண்டனம்

(நல்லூர்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III க்கான திறந்த போட்டிப் பரீட்சையில கடந்த மாதம் வடக்கில் இருந்து ஒரு பரீட்சார்த்தியேனும் தோற்றாத நிலையிலும், கிழக்கிலிருந்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் தோற்றாத நிலையிலும் சிறிலங்கா அரசினால் நடாத்தி முடிக்கப்பட்டமை தமிழ் மாணவர்களின் கல்வியை அழிக்கும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதிச்செயல்களிலொன்றாகும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக்குறைபாட்டை நீக்குவதற்கு விசேடபரீட்சை ஒன்றை வடக்குக் கிழக்கில் பரீட்சை நிலையங்களை அமைத்து (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் சுட்டுக்கொலை; வீடுகள் தீக்கிரை

(திருமலை)

திருமலைமாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், நான்கு வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை காலை திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள மல்லிகைத்தீவைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மல்லிகைத் தீவைச் சேர்ந்த செல்லப்பாவிளங்கையா (வயது 50) என்பவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். பின்னர் மல்லிகைத்தீவிலுள்ள நான்கு பொதுமக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

## 45 ஆம் நாள் நினைவாக



வீரஜனனம்
04 - 01 - 1971
வீரமரணம்
19 - 03 - 1991

**பெண்புலி**
**நளினி**

செல்வி
சின்னத்தம்பி
புவனேஸ்வரி

நளினி என்ற
நாமம் சூடினாள்
நம் தலைவனின்
பாதையில் ஓடினாள்
புலிகள் எழுதிடும்
புதிய பரணியில்
புயல் வரிகளை
இவளும் எழுதினாள்
அயல் விடிந்திடக்
களத்திலே சாய்ந்தனள்
இவள் பெயரினை
சொல்லியே பாடுவோம்

இவரின் 45ஆம் நாள் நினைவுக் கிரியைத் தினமாகிய இன்று போராளிகளையும், நண்பர்களையும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

கப்டன் நகுலன் வீதி,
சோலை வடக்கு,
கொடிகாமம்.

(R/1374)

## 31 ஆம்நாள் வீரவணக்கம்



**வீரவேங்கை**
**பார்க் குகன்**
(ஆரோக்கியம் நிக்ஷன்)

| தாயின் மடியில்: | தாயக விடிவில்: |
|---|---|
| 21-05-1970 | 04-04-1991 |

தமிழீழத்தின் தளையினை அறுக்க
தமதுயிர் துறந்த மறப்புலி வரிசையில்
மன்னார் வட்ட நானாட் டானில்
குண்டினை நெற்றியில் ஏந்தி இறந்த
லெப்டினன்ட் பார்க் குகன் என்னும் நிக்ஷன்
அண்மையில் தன்னையும் இணைத்துக் கொண்டான்
இந்தியப் படையுட னான மோதலில்
அண்ணல் ஜோன் தன்னுயிர் ஈந்தான்
சிங்களப் படையுடன் மோதிய போது
தம்பி நிக்ஷன் தன்னுயிர் தந்தான்
ஈழப் போர்வர லாறறில்
மறபபுலி இவன்பெயர் நிலைத்து நிற்கும்.

பிரிவால் துயருறும்
நண்பர்கள்

(R-1367)

## 45-ம் நாள் நினைவுதினம்



**வீரவேங்கை மேஜர் சதா**
(நடராசப்பெருமாள் திலிபகுமார்)
வரணி வடக்கு, வரணி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 17-01-1971 | 22-03-1991 |

விடியலைத் தேடி
விளைகின்ற போரில்
சமர்பல புரிந்து
சரித்திரம் படைத்த
நடராசப் பெருமாள் திருவருள்
மைந்தா மதிமுகம் மறைய
மக்கள் மனதில் சதானந்த மயமானாய்
வேகுதே உள்ளம் என்றும்
வெதுப்புதே உன் நினைவலைகள்.

மன்னார் சிலாவத்துறையில் நடைபெற்ற இலங்கை இராணுவ நேரடி மோதலில வீரமரணமடைந்த மேஜர் சதாவை நினைவு கூருகிறோம்.

-வட வரணி மக்கள்

(B/2469)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை காந்தன்**
செல்வன்
அருள்மொழி செல்வகுமார்
(சந்தை மேற்கு ஒழுங்கை
பருத்தித்துறை)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 28-06-1973 | 21-03-1991 |

மறைந்தும் மறையாத எமது அன்புச் செல்லக்குட்டியே! எங்கள் அனைவரின் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும் புன்னகை நிறைந்த உன் எழில் முகத்தை எங்கே நாம் காண்போம்? நீண்ட நாட்களாக காணாமல் ஏங்கித் தவித்து உன்வரவை எதிர்பார்த்த எங்களுக்கு இந்த சோகசெய்திதான் கிடைதததா? உன் புகழுடம்பைத்தான் காணமுடிந்ததா? ஆனால் நீ வீரப்புலி ஆனாய் விடியலுக்கு விதையானாய்.

மன்னார் சிலாபத்துறை இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த வீரவேங்கை காந்தன் அவர்களுக்கும், அவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்து;

அத்துடன்

வீரவேங்கை காந்தன் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் 05-05-1991 ஞாயிற்றுக் கிழமை இன்று) பகல் நடைபெறும். போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

N. சண்முகலிங்கம்
இல 28 சென்செபஸ்தியார் வீதி,
பாஷையூர்.

அம்மா, அண்ணன், தங்கை,
கிளி சித்தப்பா, சகோதரர், சகோதரிகள்,
அம்மப்பா, அம்மம்மா,
மாமா, மாமிமார், அன்ரிமார்.

(B 2470)

## நினைவு கூருகின்றோம்

**1991 - 05 - 05**



**றோகான்**
(தவலிங்கம் ரவிச்சந்திரன்
- பருத்தித்துறை)

1986ஆம் ஆண்டு சுதந்திரதினத்தில் கிண்ணியாவில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கைதாகி மரணமடைந்த

உதயன் (வடிவேல் பிரபாகரன் - புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு)

குரு (ஞானப்பிரகாசம் கலாமோகனராசா - தம்பலகாமம்)

1988 ஆம் ஆண்டு துணுக்காயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

றோகான் (தவலிங்கம் ரவிச்சந்திரன் - பருத்தித்துறை)

1989 ஆம் ஆண்டு கும்புறுபிட்டியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

2ஆம் லெப். றெஜினோல்ட்
(கிருஷ்ணன் வசீகரன் - திருமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2406)

♛ சிந்தனைக்கு ♛

சீரான ஒழுங்கே, சீரானது அனைத்துக்கும் அடிப்படை
— எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 020-2839 நிர்வாகபீடம் : 2208
த.பெ.எண்: 05

# தனியார் மயப்படுத்தல் மக்கள் மயப்படுத்தலல்ல

கூட்டுறவு அமைப்பு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து நீககப்பட்டு 'மக்கள் மயப்படுததப்படவுள்ளதாக' சிறிலங்கா கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதோடு இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் 'மக்கள் மயப்படுத்தல் திட்டத்தின்' தொடர் நடவடிக்கையாக இக்கூட்டுறவு அமைப்பு தனியார் மயப்படுத்தலும் இடம்பெறவுள்ளது.

உலகில் உள்ள பெரும் கடன் சுமையுள்ள நாடுகளில் சிறிலங்காவும் ஒன்றாகும். தற்பொழுது வருடாந்தம் ஆயிரம் கோடி ரூபாவை சிறிலங்கா கடனுக்குரிய முதலாகவும் வட்டியாகவும் செலுத்திவருகின்றது. ஆனால் அத்தொகை கடனைத் தீர்க்கப போதாது எனறும் எதிர்வரும் வருடங்களில் ஆயிரம் கோடிக்கு மேல் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்க வேண்டும் எனவும் சிறிலங்கா நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இன்றுள்ள ஏனைய பொருளாதார நெருக்கடிகளினாலும், வடக்கு கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தின் காரணமாகவும் மேலும் பெருமளவு நிதி சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தேவையாகவுள்ளது. இவ்வருடத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட நிதியைவிட மேலும் 260 கோடி ரூபா ஒதுக்கீடு தேவை என பாதுகாப்பு அமைச்சுக் கோரியுள்ளது. வருட இறுதிக்குள் இத்தொகை மேலும் அதிகரிக்கப் படலாம். இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் மேலும் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியை நாட வேண்டியுள்ளது.

சிறிலங்காவிற்கு கடனை வழங்கும் நிதிநிறுவனங்களில் உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும், முக்கியமானவையாகும். இந்நிதி நிறுவனங்கள் கடனைப் பெறும் நாடுகள் மீது பல கட்டுப்பாடுகளை விதிப்பது வழமையாகும். இக்கட்டுப்பாடுகள் இந்நிதி நிறுவனங்களின் முக்கிய முதலீட்டாளர்களான மேற்கு நாடுகளினதும் ஜப்பானினதும் நலன்களையும் பேணுபவையாகவும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியை ஊக்குவிபபவையாகவும் இருப்பது வழமையானதாகும்.

தற்பொழுது இந்நிதி நிறுவனங்களின் நெருக்குதலின் காரணமாகவே சிறிலங்கா அரசாங்கம் கூட்டுத்தாபனங்களையும், மற்றும் சபைகளையும் 'மக்கள் மயப்படுத்தும்' நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது உண்மையில் இந் நடவடிக்கையானது மக்கள் மயப்படுத்தல் அல்ல. தனியார் மயப்படுத்தலேயாகும்.

இந்த நிதி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் நட்டத்தினால் இயங்குவதைக் காரணம் காட்டியே அவற்றைத் தனியார்மயப்படுத்துமாறு சிபார்சுகளைச் செய்கின்றன. ஆனால்கடந்த காலத்தில சிறிலங்கா அரசாங்கங்கள் அவற்றை ஓரளவு தவிர்த்து வந்தன. ஆனால் தற்போதைய கடன் சுமையும், நிதித் தேவையும் அவற்றைத் தவிர்க்க முடியாமல் செய்துள்ளன.

தற்பொழுது யுத்த நெருக்கடியும், செலவீடும் மிக அதிகமாக உள்ளன. இதனால் யுத்தச் செலவீடுடன் சேர்த்து சேவைத்துறைகளினால் ஏற்படும் இழப்புக்களையும் சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை. இதன் காரணமாக சர்வதேச நிதிநிறுவனங்களின் கட்டுப்பாடுகளை வேறு வழியின்றி ஏற்றுக் கொள்வதன் மூலமதான் தொடர்ந்தும் தேவையான நிதியைச் சிறிலங்கா பெறக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் மக்கள் மயப்படுத்திய போக்குவரத்துத்துறை, மக்கள் மயப்படுத்தப் போகும் கூட்டுறவுத்துறை என்பனவற்றில் கடந்தகாலத்தில் நட்டம் ஏற்படுவதற்கு அத்துறைகளில் உள்ள நிர்வாகச் சீர்கேடும், அரசியல்வாதிகளின் தலையீடுமே காரணமே ஒழிய அத்துறைக்கு கிடைத்த வருமானப் பற்றாக் குறை காரணமல்ல.

சிறிலங்கா அரசாங்கம் யுத்த தேவைக்கான நிதியைப் பெறுவதற்காக மக்கள் சேவைகளிலும், மானியங்களிலும் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியுள்ளது. 1990ஆம் ஆண்டு 1000 கோடியாக இருந்த பாதுகாப்புச் செலவு இவ்வருடம் 1560 கோடிரூபாவைத் (இன்னும் அதிகரிக்கலாம்) தாண்டிவிட்டது.

இந்நிலையில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுமானால் அரசாங்கம் தமது உடைமைகளை முழுமையாக தனியாரிடம் விற்பதோடு, கல்வி, சுகாதாரம், உட்பட்ட சகல சேவைகளையும் 'மக்கள் மயப்படுத்தினால்' ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அரசாங்கத்தின் பார்வையில் முதலாளிகளும் மக்கள் தானே.

## இந்திய, சிறிலங்கா வறட்டுக்கெளரவம்

# புலிகள் தலைமைத்துவத்தை ஏற்க இடம் தரவில்லை

(நேற்றைய தொடர்ச்சி)

இவர் புலிகளின் மனோ திடத்திற்கும் செயதிறனுக்கும் முதலிடமளிக்கிறார். பிரபாகரன் ஓர் மதிநுட்பம் வாய்ந்த காணத்ரீய இராணுவத் தலைவர் என்பதையும் குறிப்பிடுகிறார் விடுதலைப் புலிகளின் நடத்தைகள் வழிமுறைகள், எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது உயிரினையே துச்சமாக மதிக்கும் தன்மை இவர்களை ஈடு இணையற்ற விடுதலைப் போராளிகளாக்கின. இவர்களைப் பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட கணிப்பு என்னவெனில் கூட்டுத்தப்படையாக இயங்கும் இவர்கள் மரபுவழிப் போராட்டங்களையும் நடத்த வல்லவர்கள். ஆகவே கணிசமான எதிர்காலத்திற்கு புலிப்படையினரை அசைக்க முடியாது. திரு பிரபாகரன் அவர்கள் குறைவாகவே பேசுவார். ஆனால் தீர்க்கதரிசன எண்ணங் கொண்டவர். மிக முக்கியமான விடயங்களில் தமிழ்மொழியில் வல்லமையுடை பேசும் ஆற்றல் கொண்டவர். 1986 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் சென்னையிலும், 1987 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் யாழ்ப்பாணத்திலும் அவருடன் பேசும் போது தமிழர் பிரச்சினை எவ்வாறு உருவெடுக்கும், அதன் முடிவு எப்படியிருக்கும் என்பதைத் தீர்க்கதரிசனத்துடன் எனக்குக் கூறினார். தீவிரவாதிகளை விடுதலைப் போராளிகளாகவே தலைவர் பிரபாகரன் மதிக்கின்றார். ''தமிழ் மக்களைப் பாதுகாக்கும் இராணுவப் பிரிவாக இயங்கி வரும் போராளிகளாக விடுதலைப் புலிகளை; அரசபடையினர், இலவாத, இன அழிப்புப் படையாக இயங்குவதால் தமிழ் மக்களை அவர்களிடமிருந்து காப்பற்றித் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் தேசிய இராணுவமாக இயங்குகின்றோம்'' என்று கூறினார். அடுத்ததாக தலைவர்களின் திடசங்கற்பமும், தியாக மனப்பான்மையும், ''இப்பிரச்சினைக்கு மக்களை நாம் தயார் செய்துள்ளோம். எமது போராளிகள் எத்தனை பேர் இறந்தாலும் எமது எதிர்ப்பைக் கடைசி வரை கைவிட மாட்டோம் இதுதான் எமது முடிவு'' எனப் பிரபாகரன் கூறினார். இப்போராட்டத்தில் கலந்து கொள்ளாது விலகி நிற்போரை வன்மையாகக் கண்டிக்கிறார். முன்னாள் வர்கள் கொடூரத்தன்மையும் ஒழுக்கமும் பற்றிக் குறிப்பிடும் போது ''இராணுவ நடவடிக்கைகள் கொடூரமானவையாகத்தான், வெற்றியீட்டுவது விளைவுகளை மேலாக மதிக்கப்படுகின்றது. நாம் எமது மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோம். கொடூரமான எமது எதிரிக்கு முன்னால் நாம் எப்படி அமைதிக்காக முடியும்? இது தான் உண்மை நிலை'' எனக் கூறினார். இறுக்கமான ஒழுக்க நெறி, கொடூரத்தன்மை, துப்பாக்கியின் பலம் போன்றவை பல பொறுப்புணர்ச்சிகளைக் கொண்டவை. ''துப்பாக்கி தரித்தவர்களிடத்தில் அதிகாரங்கள் வந்தடைகின்றன. இவ்வதிகாரங்கள் துஷ்பிரயோகப்படின் சர்வாதிகாரத்திற்கு வழிகோலும் என்பதை நாம் அறிவோம். ஆகையாற்றான் நாம் எமது வீரர்களைக் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றோம். கொடூரமானவர்களுக்கெதிராகவே கொடூரமானவர்களாய் நடந்து கொள்கிறோம் இல்லாது விடின் வெற்றியடைய முடியாது'' புலிகள் சயனைட் குப்பியணிவதைக் குறை கூறிய போது ''எமது இயக்கப் போராளிகளை சிறைச்சாலைகளிற்காண முடியாது. எமது இயககம் துரித கதியில் வளர்ச்சியடைவதற்கு இச்சயனைட் குப்பிகளே மூலகாரணமாகும். உண்மையில் இது தான் எமது போராளிகளுக்கு எமது நோக்கத்தில் மேலதிக நம்பிக்கை யூட்டும் காரணியாக அமைந்துள்ளது

நான்காவதாக பிராபகரன் தனது அரசியல் எண்ணத்தைக் கூறும்போது,

''இனவாத சிங்கள அரசியல்வாதிகளை நப்பி நமது முன்னோர்கள் இழைத்த தவறுகளை நாமும் இழைக்கப் போவதில்லை. வேறு வழியின்றி சோசலிச தமிழ் ஈழம் தான் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு உகந்ததென எண்ணுகின்றோம். எவராவது இதற்குச் சமமான மாற்று வழிகளைத் தெரிவித்தால், நாம் அதை மக்கள் முன் சமர்ப்பித்து அவர்களின் ஆணையைப் பெற்றபின் எமது நிலைப்பாட்டினை மாற்றுவது பற்றிச் சிந்திப்போம். அரசியல் நடவடிக்கைகளைவிட இராணுவ நடவடிக்கைகளையே பிரபாகரன் விரும்புவதாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் ''எமது நோக்கில் வார்த்தைகளில் அதிக நம்பிக்கை கொண்டவன் நானல்ல, ஆனால் செயல் மூலம் விடிவுகாண விழைகின்றேன். செயலின் பின் சொல்லாடல், இதுவே என் வழி'' என்றார் பிரபாகரன். புலிகளின் தலைவனான பிரபாகரனின் எண்ணக் கருவூலங்கள் மறக்க முடியாதனவும், துக்ககரமானதுமான சந்தர்ப்பங்களால் எழுந்தன. இவரின் தனிப்பட்ட கதாநாயகர்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களான நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பகத்சிங் மற்றும் தமிழ் நாட்டின் விடுதலை வீரர்களாவர். இவர் நெப்போலியனின இராணுவ தந்திரோபாயங்களிலும் மகாத்மா காந்தியின் வழிமுறைகளிலும் ஆர்வங்கொண்டவர். (பிரபாகரனின் பார்வையில் இவர் சுபாஸ் சந்திரபோசை ஒப்பிட முடியாது).

மிக முக்கியமாக தமிழ்மக்களின் விடுதலைக்காக எதையுமே விட்டுக் கொடுக்காத பாதுகாவலனாகத் தன்னை வரித்துக்கொண்டார். விடுதலைப் புலிகளின் தளபதியாக விளங்கும் பிரபாகரன் தனது இறந்த போராளிகளின் கனவுகள் நிறைவேறுவதையே தனது முதற் கடமையாகக் கொண்டு வழி நடப்பவர் சிறிலங்கா-இந்திய ஒப்பந்தம்பற்றி நான் பிரபாகரனிடம் வினவிய போது ''இதற்காகத்தானா இத்தனை போராளிகளும் இறந்தனர்'' என விடையளித்தார். நான் யாழ்நகரில் பிரபாகரனிடம் மிக முக்கியமான வினாவொன்றை, ''தமிழ் ஈழம் கிடைத்த பின் நீங்கள் என்ன செய்ய எண்ணியுள்ளீர்கள்? என வினவிய போது, பிரபாகரன் தனது மௌனத்தைக் கலைத்துச் சொன்னார். ''கூட்டு முயற்சி அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட சமூக சேவையில் ஈடுபடுவேன்'' எனக்கூறினார்

சிறிலங்காவின் இறைமைக்குள் சமஷ்டி அமைப்பாக ஈழமானது மீள வரையறுக்கப் பட்டால் ஒழிய இவ்வேளையில் ஈழமானது பயனில்லாத கற்பனையாகும். ஆனால் ஈழத்திற்காக போராடும் ஆயுதம தரித்த இயக்கத்தினை அழிப்பதன் மூலம் சிறிலங்காவின் இறைமையை உறுதிப் படுத்தலாம் எனபதும் சிறுபிள்ளைத்தனமானதும், கற்பனையானதுமான தொன்றாகும் என்பதனை ஜனாதிபதிகள் ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரும் இந்தியத் தலைவர்களும் கணிசமான செயலின் பின் உணர்ந்து கொண்டனர்.

இந்திய அமைதிப்படையின் அனுபவத்தின் பின் இந்தியாவில் ஆழமான அரசியல் கருத்துடைய இந்தியர்கள் மத்தியில் தமிழீழப் போராட்டத்தையும், போராளிகளையும் அபிமானமாக பார்க்கின்ற ஆபத்து இல்லாது போயிற்று.

அதற்காக தனது இலட்சியத்தினை குறியாக இருக்கும் தனித்துவமும் திறமையும் வாய்ந்த அதன தலைவருக்கு மாசு கற்பிப்பதில் அர்த்தமில்லை.

(முற்றும்)

**தகவல்: ஏ. ராம்.**

**(இந்தியாவில் பிரபல பத்திரிகையாளரும் 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தைகளின் முக்கிய பங்காளியுமாவார்.)**

# உள்ளூராட்சித் தேர்தலில் கன்சர்வேட்டிவ் தோல்வி

(லண்டன்)

பிரிட்டனில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ்கட்சி பலத்த தோல்வியைச் சந்தித்துள்ளது. இதனால் அண்மைக் காலத்தில் பொதுத் தேர்தல் இடம் பெறும் வாய்ப்பு குறைந்துள்ளது. 369 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குப் பதிவையும் தேர்தல் முறையையும் கவனிக்கும் போது பல கேந்திர நகரங்களில் கன்சர் வேட்டிவ் கட்சி செல்வாக்கு இழந்திருப்பது தொழிற்கட்சி பெரும் வெற்றியீட்டியிருப்பதும் தெரிய வருகிறது. முற்போக்கு ஜனநாயக வாதிகளான லிபரல் கட்சியினரும் கணிசமானளவு தொகுதிகளை இத்தேர்தலில் கைப்பற்றியுள்ளனர்.

ஐரோப்பிய சமூகநாடுகள்

# புகையிலை விளம்பரங்களைத் தடைசெய்யத்திட்டம்

(லண்டன்)

ஐரோப்பியபொருளாதாரச் சமூகத்திலனச் சார்ந்த நாடுகளிடையே புகையிலை விளம்பரங்களைத் தடைசெய்யும் திட்டமொன்றுநடைமுறைக்கு வரவுள்ளது. அதேவேளை விளையாட்டுப்போட்டிகளுக்கு ஆதரவளிக்கும் புகையிலைநிறுவனங்கள் இத்திட்டத்திற்கு எதிராக ஆதரவைத் திரட்டுவதில் மும்முரமாகியுள்ளதாக தெரிகிறது.

ஐரோப்பிய சமூக நாடுகள் சிலவற்றில் ஏற்கெனவே சிகரட் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. புகையிலைப் பொருள்களின் விளம்பரம் முற்றாகத் தடுக்கப்படுமானால்புகையிலைத்தொழில் பாதிப்படையலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனினும் தடைவிதிக்கும் திட்டங்கள் எதிவரும செவ்வாய்க்கிழமையன்று திட்டமிட்டபடி வெளியிடப்படுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இத்தாலி, பிரான்ஸ், போர்த்துக்கல் ஆகிய நாடுகளும் ஐரோப்பிய சமூகத்திலுள்ள வேறு சில நாடுகளும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் எனவும் தெரியவருகிறது.

## பிரான்ஸின் யோசனைக்கு ஈரான் ஆதரவு தெரிவிப்பு

(தெஹிரான்)

ஈராக்அதிபர் சதாம்ஹுசைனைப் போர்க் குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டுமென்னும் பிரான்சின் யோசனைக்கு ஈரான் ஆதரவு தெரிவித்துள்ளது. தெஹிரான் சென்றுள்ள பிரான்ஸ வெளியுறவு அமைச்சருடன் செய்தியாளர் கூட்டத்தில்பேசிய ஈரானிய வெளியுறவ அமைச்சர் அலி அக்பர் வெலயாத்தி அவர்கள் எதிர் காலத்தில் இத்தகைய குற்றங்கள் நிகழாதிருக்க சதாம் ஹுசைன் மீதான விசாரணை உதவும் என்று தெரிவித்துள்ளார்.

நஷ்டஈடு வழங்க

## ஐந்து வருட அவகாசம் ஈராக் கோருகின்றது

(பாக்தாத்)

தனது பொருளாதாரத்தை சீரமைத்துக்கொள்ளும் வரை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வளைகுடாப் போர் காரணமாகத் தான் தர வேண்டியிருக்கும் செப்பனீட்டுத்தொகையைத் தாமதிக்குமாறு ஐ நா.வை ஈராக் கடிதமூலம்கேட்டுக்கொண்டுள்ளது.

பேர்காரணமாக ஏற்பட்ட இழப்புகளுக்கு ஈடாக எண்ணெய் வருவாயில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட வேண்டுமென ஐ. நா. ஆராய்ந்து வரும் நிலையில் ஐ நா செயலாளருக்கு ஈராக் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஈச்சமோட்டை கிராமசேவகர் பிரிவில்

## 600 நிவாரண அட்டைகள் தேடிப்பிடிக்கமுடியவில்லை

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை ஜே66கிராமசேவகர் பிரிவில் 600க்கும்மேற்பட்ட நிவாரண அட்டைகளைத் தேடிப்பிடிக்க முடியவில்லையாம் நிவாரண அட்டைகள் தொடர்பான மீள்பரிசீலனை மேற்கொண்டபோதே நிவாரண அட்டைகளையும் அந்த அட்டைக்குரியவர்களையும் ஜே.66 கிராமசேவையாளர் பிரிவில் காணவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மூளாய் ஜே. 17 கிராமசேவகர் எஸ். மகாலசிங்கம் உடனடியாகச் செயற்படும் படியாக ஈச்சமோட்டை ஜே.66 கிராமசேவகர் பிரிவுக்கு மாற்றலாகியுள்ளார்.

## கிணற்றுக்குள் இருந்து எலும்புக்கூடுகள் மீட்பு

(நல்லூர்)

புளியங்குளம் கரப்பான்காடு பகுதிகளல் உள்ள சில கிணறுகள் துப்புரவு செய்யப்பட்ட சமயம் எலும்புக்கூடுகள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட வேறு பல பொருள்களும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த இப்பகுதியில் பசமந்தன் பத்மரஞ்சன் என்னும் புளியங்குளம் கிராமசேவகரின் வீட்டுக்கிணற்றைச் சுத்தம் செய்த சமயம் அக்கிணற்றினுள் மனித எலும்புக்கூடும், மோட்டார் சைக்கிளும் எடுக்கப்பட்டது. கரப்பான்காடு பகுதியிலும் சில கிணறுகளில் துர்நாற்றம் கிளம்பியதையடுத்து சுத்தம் செய்தபோது மனித எலும்புக் கூடுகள் கிடந்து எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (85

## ஒருவ ரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை வங்கி நடைமுறைப்படுத்திய விசேட வைப்புச் சான்றிதழ் திட்டம் மேலும் ஒருவரம நீடிக்கப்பட்டிருக்கின்றது இவ்வாறு இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் தெரிவித்தார். (க)

## முன்மாதிரி

யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம இடம்பெயர்ந்த தீவகப்பகுதி மக்களுக்கு சமைத்த உணவுப் பொதிகளை சேகரித்து வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. சுமார் ஆயிரம் உணவுப் பொதிகளை சேகரித்து சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தங்கியுள்ள தீவக மக்களுக்கு விநியோகித்துள்ளது. உணப்பொதிகளை சேகரிக்க உதவிய பொது மக்களுக்கும் தீவக மக்களின் சார்பிலும் யாழ்ப்பாணம்மத்தியகல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் சார்பிலும் மன்றப்பொறுப்பாசிரியர் திரு. நடராசா நன்றி தெரிவித்துள்ளார்.

## அகதிமுகாம் பராமரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அகதிமுகாம் ஒன்றை பராமரிப்பது பற்றிய ஒரு கலந்துரையாடல் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

மேலும் மடு அகதி முகாமில் உள்ள அகதிகளுக்கு மருந்துப் பொருள்கள் மற்றும் இதர உணவு, உதவிப்பொருள்களை திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டது. (வோ)

## பங்களாதேஷில் தேசியதுக்கதினம்

(டாக்கா)

பங்களாதேசத்தில்வீசியகடும் புயலையடுத்து நாட்டில்தேசிய துக்கம் கடைப்பிடிக்கும்படி பிரதமர் பேகம் காலிதா ஷியா வேண்டுகோள்விடுத்துள்ளார். நிவாரணம் வழங்கும் பணியில் எதிர்க்கட்சியினரையும் ஒத்துழைக்கும்படியும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை பங்களாதேசத்திற்கு உதவி வழங்க முன்வரும்படி ஐ நா. பொதுச் செயலாளர் சர்வதேச சமூகத்திற்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நிவாரணக்கப்பல் மூழ்கியது

(டாக்கா)

அரசு சாராத அமெரிக்க உதவியமைப்பு ஒன்று வாடகைக்கு அமர்த்தியிருந்த கப்பலொன்று உணவு மற்றும் மருந்து வகைகளுடன் சூறாவளி தாக்கிய தீவொன்றுக்குச் சென்றுகொண்டிருந்த போது வங்கக் கடலில் மூழ்கியுள்ளது. இதுபற்றி மேலும் செய்திகள் எதுவும் தெரியவரவில்லை.

**ஓமந்தை**

லங்கா இராணுவத்தினர் பேயாடி கூழாங்குளத்திற்கும், ஓமந்தைக்கும்சென்றுள்ளனர். இம் மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், வை 12 ரக விமானமொன்று, இரண்டு ஹெலிகொப்ரர்கள் ஆகியன தொடர்ச்சியான விமானத்தாககுதல்களைமேற்கொண்டவண்ணமிருந்தன.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

**பரீட்சை**

நடாத்தும்படி ஜனாதிபதி. கல்வி அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச்சர், பரீட்சை ஆணையாளர், கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்குப பொதுச் செயலாளரினாலும், இப்பரீட்சைக்குத் தோற்றும் ஐநூறிற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகளினாலும் ஒப்பமிடப்பட்ட மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கைக் கல்வி நிர்வாக சேவை வகுப்பு iii க்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையைக் கொழும்பில் மாத்திரம் நடாத்தாது வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் பரீட்சை நிலையங்களை அமைத்து பரீட்சையை நடாத்தும் படியும், இப்பரீட்சைக்கான திகதிகள் க. பொ. த உயர்தர விசேட பரீட்சைத் தினங்களிலோ அல்லது விடைத்தாள்கள் திருத்தும் தினங்களிலோ நடாத்தாது வேறு திகதிகளில் நடாத்துமாறும் கோரப்பட்டுளளது.

இம்மகஜர் சமர்ப்பிக்கப்படாமையால் இலங்கைக் கல்விநிர்வாகசேவை iii க்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைத் திகதி நிர்ணயிக்கப்படாது பின்போடப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதெனப் பொதுச்செயலாளர் மகஜரிலும் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில்

## அமெரிக்கத் தளங்கள்; பேச்சுவார்த்தை முறிவு

(மணிலா)

பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்கத்தளங்களின் எதிர்காலம் சம்பந்தமாக அமெரிக்காவிற்கும் பிலிப்பைன்ஸிற்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன. வருடாந்த இழப்பீடாக 82 கோடி 50 லட்சம் டொலர்களைத் தர வேண்டுமென்ற பிலிப்பைன்ஸின்கோரிக்கையை ஏற்க அமெரிக்கா மறுத்து விட்டது.

அமெரிக்காவின் பிரதம பேச்சாளர் அமெரிக்க அதிபருடன் ஆலோசனை கலப்பதற்காக வாஷிங்டன் புறப்பட்டுச் சென்றதையடுத்து பேச்சுவார்த்தைகள் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன. ஆசியாவிலேயே அமெரிக்காவின் பெரிய இராணுவ கடற்படைத் தளங்கள் பிலிப்பைன்ஸிலேயே உள்ளன. அமெரிக்காவின் இந்தத் தளங்கள் செயற்பட வேண்டிய அவசியத்தை ஜப்பான், சிங்கப்பூர், தாய்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

## படகுச்சேவை இல்லை

(புங்குடுதீவு)

படகுச் சேவை இல்லாததனால் புங்குடுதீவு சர்வோதயத்தில் பெருமளவு நெடுந்தீவு மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை நெடுந்தீவிலிருந்து வந்த பயணிகள் படகு நெடுந்தீவிற்குத் திரும்பிச் செல்லாததனாலேயே மேற்படி மக்கள் தங்கிநிற்கவேண்டியேற்பட்டது. (22)

## ஆசிய விவகாரங்களில் ஜப்பான் பங்கேற்கும்

(சிங்கப்பூர்)

— கைக்கூ

ஆசிய நாடுகளின் விவகாரங்களில் தனது நாடு முக்கிய பங்கை வகிக்கும் என்று யப்பானியப் பிரதமமந்திரி கெய்சிக்கி கைக்கூ கருத்து வெளியிட்டுள்ளார். தனது நாடு ஒருபோதும் இராணுவ ரீதியில் வல்லரசாக உருப்பெறாது என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் அவர் வழங்கிய கொள்கைவிளக்க உரையில் மேற்கண்டவாறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பிராந்திய ரீதியிலான பிரச்சினைகளும், தகராறுகளும் தீர்த்துவைக்கப்படுவதில் யப்பான் பெரிதும் உதவும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிபுணர்களும்,புத்திஜீவிகளும் சமுகமளித்திருந்த ஒரு மாநாட்டில் உரைநிகழ்த்திய பிரதமர், தமதுநாடு பெருமளவில் உதவிகளையும், சேவைகளையும் வழங்கும் என்று சொன்னார் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் கடந்த காலத்தில் யப்பானின் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார். இத்தகைய செயல்கள் நிகழ்காலத்தில் இடம்பெறாது என்றும் அவர் வாக்குறுதி அளித்தார்.

## சைக்கிள் திருட்டுக்கள்

இடம்பெயர்ந்து வந்திருக்கும் புங்குடுதீவு மக்களுக்கு உலர்உணவு விநியோகம் செய்துகொண்டிருந்த சங்க ஊழியரின் சைக்கிள்ஒன்று கடந்த வியாழனன்று களவாடப்பட்டுள்ளது. புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங் கிராமிய வங்கி முகாமையாளரான து. வசந்தகுமார் என்பவரின 'றலி' சைக்கிளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது

இந்தக் களவு நடைபெற்ற இடமாகிய சிறாம்பியடி லேனல் அதேநேரத்தில் உணவுப் பொருள் வாங்க வந்து நின்ற நாரந்தனை வாசிஒருவரின் சைக்கிளும் திருடப்பட்டது மேலும் மானிப்பாய் வீதியில வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உணவு விநியோகம் செய்துகொண்டிருந்த இடத்தில் இருந்தும் இரண்டு சைக்கிள்கள் களவாடிச்செல்லப்பட்டுள்ளன .(22)

**பிரான்ஸ்**

விலான செஞ்சிலுவைச்சங்கக் கொடி பறக்கவிடப்பட்டிருந்ததாகவும் இந் நிறுவனப் பிரதிநிதி கொழும்பில செய்தி வெளியிட்டுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் கொழும்பில இராணுவத்தலைமையலுவலகத்திடம் முறைப்படியான அனுமதியைப் பெற்றே தமது குழுவினர் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், காயமடைந்த நால்வரும் அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

**இளைஞர்**

ரின் துப்பாக்கிச் சூட்டுக்கு கந்தன் செல்வராசா (வயது 21) என்ற தெல்லிப்பழையைச் சேர்ந்த இளைஞர் பலத்த காயம் அடைந்துள்ளார். தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியரான இந்த இளைஞர் நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் (85)

**இரண்டாம்**

சாலையில் மாலை நேர வகுப்புகளை ஒழுங்கு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது இது தொடர்பாக யாழ். மாவட்டத்தின் சகல உதவி கல்வி அதிகாரிகளும் நாளை விசேட ஆலோசனைக் கூட்டம் ஒன்றிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (க)

## மாதாந்த உதவிப் பணம்

(ஈச்சமோட்டை)

தெல்லிப்பழை தபாற்கந்தோருக்கு உட்பட்டபிரதேசங்களுக்கானமார்கழி தைமாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் துர்க்கை அம்மன் கோயிலில் தற்காலிகமாக இயங்கும் தெல்லிப்பளை தபாற்கந்தோரில் வழங்கப்பட்டு வருகின்றது (43)

## இடமாற்றம்

(பளை)

பளை கோத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. அ. பொ. செல்லையா இடமாற்றம் பெற்றுள்ளார். அவரது பதவிக்கு வட்டக்கட்சி கோத்தணியின் அதிபராக இருந்த திரு. ப. அரியரத்தினம் நியமிக்கப்பட்டு முதலாம் திகதிமுதல் பொறுப்பேற்றுள்ளார்.

**க. பொ. த.**

அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாகவும், ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் பரீட்சைகள் தொடருமெனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளதாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. மேலும் அச்செய்திக் குறிப்பில் மேமாதம் ஆறாம் திகதியிலிருந்து நடைபெற இருந்த மீதிப் பரீட்சைகள் முனபு போலவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒருமித்து நடாத்தப்படும திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.